# IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE
# (FAST TRACK COURT), VELLORE, VELLORE DISTRICT.

## DEPOSITION OF WITNESS

OS.NO. - 152/2018
P.W.1 - சரஸ்வதி க/பெ.ரவிசந்திரன்
DATE - 20.03.2023.

வா.சா.1 மீண்டும் அழைக்கப்பட்டு பிரதிவாதிகள் 6 முதல் 9 வரையிலான தரப்பில் குறுக்கு விசாரணை.

முதல் பிரதிவாதியான மார்க்கபந்து என்பவருக்கு வாதிகளான நாங்கள் 6 பேர் மற்றும் மூத்த சகோதரி மகேஸ்வரி மற்றும் ஒரு சகோதரர் ராஜேந்திரன் ஆகியோர்கள் வாரிசுகள் என்றால் சரி தான். அந்த ராஜேந்திரன் என்பவர் இறந்து விட்டதால் 2 முதல் 4 பிரதிவாதிகளை அவரின் வாரிசுகளாக சேர்த்துள்ளோம் என்றால் சரி தான். மகேஸ்வரி என்பவர் இறந்து விட்டதால் 6 முதல் 9 பிரதிவாதிகளை அவரின் வாரிசுகளாக சேர்த்துள்ளோம் என்றால் சரி தான். முதல் பிரதிவாதியான மார்க்கபந்து தாவா தாக்கல் செய்த பின் இறந்து விட்டார் என்றால் சரி தான். தாவா தாக்கல் செய்த போது தாவா சொத்துக்களை 9 பாகங்களாக பிரிக்க வேண்டும் என்று கேட்டிருந்தேன் என்றாலும் தற்போது முதல் பிரதிவாதி இறந்து விட்டதால் 8 பாகங்களாக பிரிக்க வேண்டும் எனறு கோருகிறேன் என்றாலும் சரி தான். தாவா சொத்துகள் அனைத்தும் மூதாதையர் சொத்துகள் என்றால் அவை கூட்டுக்குடும்ப சொத்தாகும். தாவா சொத்துகள் தவிர முதல் பிரதிவாதி தனியாக வியாபாரம் செய்து வந்தார் என்றால் சரி தான். என்ன வியாபாரம் செய்து வந்தார் என்றால் லாரி உரிமையாளர் மற்றும் லாரியை வாடகைக்கும் விடுவார். சரக்குகளை கமிஷனுக்கு அனுப்பி வைப்பார் என்றால் சரி தான். அந்த வியாபாரம செய்தவற்காக மண்டி தெருவில் உள்ள ஷராப் குமாரசாமி செட்டியார் தர்மசத்திரத்திற்கு பாத்தியப்பட்ட கடை கட்டிடத்தை வாடகைக்கு எடுத்திருந்தார் என்றால் சரி தான். அந்த வியாபாரத்தை நான் இந்த தாவாவில் காட்டவில்லை என்றால சரி தான். அந்த

வியாபாரத்தை 3ம் பிரதிவாதி ராஜேஷ்குமார் தான் நடத்தி வருகிறார் என்றால் சரி தான். அந்த வியாபாரத்தில் எனக்கும் மகேஸ்வரியின் வாரிசுகளான 6 முதல் 9 பிரதிவாதிகளுக்கும் பங்கு உள்ளது என்றால் சரி தான். அதனால் 6 முதல் 9 பிரதிவாதிகளுக்கு தாவா சொத்தில் ஒரு பாகம் கொடுப்பதில் எனக்கு ஆட்சேபனை எதுவும் உள்ளதா என்றால் இல்லை. என்னுடைய தாயாரின் சொத்துகளிலும் 6 முதல் 9 பிரதிவாதிகளுக்கு பாகம் உள்ளது என்றால் சரி தான்.

P REVATHY Digitally signed by P REVATHY

Additional District Judge(FTC),

Vellore.